

சென்னை, தியாகராயர் நகர் தொகுதி 130 வது வார்டு, வடபழனி சிம்ஸ் மருத்துவமனையின் பின்புறம் 9 கிரவுண்டு பரப்பளவில், தியாகராயர்நகர் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 75 இலட்சம் மதிப்பீட்டில் மறுசீரமைப்பில் அமைந்துள்ள விளையாட்டுத்திடல் மற்றும் சிறுவர் பூங்காவினை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார். தியாகராயர்நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, முனைவர் தமிழச்சிதங்கபாண்டியன் எம்.பி, துணை மேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். அந்த விளையாட்டு திடலில் கேரம் போர்டு, கிரிக்கெட், கபடி, சிலம்பம் ஆகிய விளையாட்டை பார்வையிட்டனர். தியாகராயர் நகர் மேற்கு பகுதிச் செயலாளர் கே. ஏழுமலை எம்.சி, வட்டச் செயலாளர் தட்சன் ஹரிஹரன், 130 வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ்.பாஸ்கர் ஆகியோர் உடனிருந்தனர்.


### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமை! வே.வாசு - கூ.பி.ஜெயின் பங்கேற்பு!

# வில்லிவாக்கம் டி.வி.செம்மொழி எம்.சி. - கிரிஜா இல்ல மணவிழா வரவேற்பு!

### பா.மு.முபாரக் - தயாநிதிமாறன் எம்.பி. - மேயர் பிரியா - அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ. வாழ்த்து!

*சென்னை, ஜூன்.5*

வில்லிவாக்கம் கிழக்குப் பகுதிக் கழக தலைமைப் பொதுக்குழு உறுப்பினரும் 104 வது வார்டு மாமன்ற உறுப்பினருமான டி.வி. செம்மொழி - கிரிஜா ஆகியோரின் புதல்வி செ. தயாளு - அ.சாகர் மேத்தா ஆகியோரின் மணவிழா நாளை (6.6.2025 - வெள்ளிக்கிழமை) காலை 7.30 மணிக்கு சென்னை, அண்ணா நகர் மேற்கு 13 வது பிரதான சாலையில் அமைந்துள்ள தேவி திருமணியம்மன் ஆலயத்தில் நடைபெறுகின்றது.



அதனைத் தொடர்ந்து மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி சென்னை, அமைந்தகரை புல்லா அவென்யூவில் அமைந்துள்ள எல்.கே.என்.திருமண மண்டபத்தில் நாளை (6.6.2025 வெள்ளிக்கிழமை) மாலை 6.30 மணிக்கு நடைபெறுகின்றது.

மணவிழா வரவேற்பிற்கு சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையேற்று மணமக்கள் செ.தயாளு - அ.சாகர் மேத்தா ஆகியோரை வாழ்த்துகிறார்.

மேலும் இம் மணவிழா வரவேற்பில், நீலகிரி மாவட்டக் கழக முன்னாள் செயலாளர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பா.மு.முபாரக், தயாநிதி மாறன் எம்.பி., மேயர் பிரியா ராஜன், அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., வில்லிவாக்கம் கிழக்குப் பகுதிச் செயலாளர் வே.வாசு, மேற்கு பகுதிச் செயலாளர் மண்டலக் குழுத் தலைவர் கூ.பீ.ஜெயின்,

வட்டச் செயலாளர்கள் சொ.முருகேசன், ப.லோகு பாபு, கே.எஸ்.பாபு, பா. இளையா, ப.மலர்க்கொடி, உள்பட மாவட்ட, பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னணித் தோழர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மணவிழாவிற்கு வருகை தருவோரை 104 வது வார்டு மாமன்ற உறுப்பினர் - கழக தலைமை பொதுக்குழு உறுப்பினர் டி.வி.செம்மொழி, திருமதி கிரிஜா செம்மொழி, செ.அஞ்சுகமொழி செம்மொழி ஆகியோர் வரவேற்கின்றனர்.





